பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

15 09 2026 TUESDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ராஜஸ்தான் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபிக்கு கிடைத்துள்ள வெற்றி, மத்திய அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஐரோப்பாவின் முன்னணி வாகன உதிரிப் பாகங்கள் தயாரிப்பு நிறுவனம், தமிழகத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

3. மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் அஇஅதிமுக வெற்றிபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

5. இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<

ராஜஸ்தான் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபிக்கு கிடைத்துள்ள வெற்றி, மத்திய அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநில உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பிஜேபிக்கு அமோக வெற்றியைத் தேடித் தந்த அம்மாநில மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

பொய்ப்பிரச்சாரங்களை முறியடித்து, உண்மைக்கு கிடைத்த வெற்றி இது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரட்டை எஞ்சின் அரசின் நல்லாட்சி மற்றும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ராஜஸ்தான் மக்கள் ஆதரிப்பதை இந்த வெற்றி மீண்டும் தெளிவுபடுத்தியிருப்பதாகவும், மாநிலத்தின் வளர்ச்சியை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கான உறுதிப்பாட்டை இது வலுப்படுத்தும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஜெய்ப்பூர், உதய்ப்பூர், பில்வாரா, கோட்டா உள்ளிட்ட 10 மாநகராட்சிகளையும், 47 நகராட்சி கவுன்சில்கள் மற்றும் 252 நகராட்சிகளையும் பிஜேபி கைப்பற்றியுள்ளது.

பிகானிர் மாநகராட்சியில் மட்டுமே காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

>>>>>>><<<<<<<

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நேற்றிரவு சென்னை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

>>>>>>><<<<<<<

ஐரோப்பாவின் முன்னணி வாகன உதிரிப் பாகங்கள் தயாரிப்பு நிறுவனம், தமிழகத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள முதலமைச்சர், இந்தியாவில் அந்த நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் முதலீட்டிற்கு தமிழ்நாட்டையே விரும்பத்தக்க இடமாக கருதுவதாக கடிதம் அளித்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

அந்த நிறுவனத்தால் முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டை சாத்தியமாக்கவும், தமிழ்நாட்டில் அதன் செயல்பாடுகளை வெற்றிகரமாக நிறுவவும் தேவையான

அனைத்து ஆதரவையும், ஒத்துழைப்பையும் மாநில அரசு வழங்கும் என்று தாம் உறுதியளித்திருப்பதாகவும் திரு. விஜய் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

கும்பாபிஷேக ஏற்பாடுகள் குறித்து, மதுரையில் பல்வேறு துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ரமேஷ் 36 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் அஇஅதிமுக வெற்றிபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏற்கனவே இந்த தொகுதிகளில் அஇஅதிமுக வெற்றி பெற்றதை சுட்டிக்காட்டினார்.

முதலமைச்சர் திரு. விஜய்-ன் லண்டன் பயணம் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, தமிழ்நாட்டிற்கு அவர் எந்த அளவு முதலீடுகளை ஈர்த்து வந்தார் என்பது அவர் தமிழகம் திரும்பிய பிறகே தெரியவரும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி பதிலளித்தார்.

இதனிடையே, மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் இடதுசாரி கட்சிகளின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்படவுள்ளனர்.

>>>>>>><<<<<<<

நீலகிரி மாவட்டம், முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமில், விநாயகர் சதுர்த்தி விழா ஒவ்வோராண்டும் விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம்.

அதன்படி, நேற்று யானைகள் பங்கேற்று, அங்குள்ள விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் செய்ததை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் – சரவணன் 52 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் நீலகிரி, கோவை, ஈரோடு உட்பட 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

தருமபுரி, திண்டுக்கல் மாவட்டங்களில் நேற்றிரவு பெய்த மழை காரணமாக, வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுவதாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – தண்டபாணி 23 ராஜசேகரபாரதி 31 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

மும்பை தாக்குதல் வழக்கில் முக்கிய குற்றவாளியும், ஜெய்ஷி முகமது அமைப்பின் நிறுவனருமான Masood Azar குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 70 லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியா - கனடா இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான நான்காம் சுற்று பேச்சுவார்த்தை புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

>>>>>>><<<<<<<

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி, மும்பையில் மஹாராஷ்ட்ர துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே இல்லத்தில் நடைபெற்ற பூஜையில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பங்கேற்றார்.

>>>>>>><<<<<<<

பூட்டான் சென்றுள்ள தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar, திம்புவில் அந்நாட்டு மன்னர் Jigme Khesar Namgyel Wangchuck-ஐ சந்தித்து பேசினார்.

>>>>>>><<<<<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

>>>>>>><<<<<<<

கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதியான கோழிவிளை, களியக்காவிளை பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளை ஆட்சியர் திரு. பிரதாப் நேற்றிரவு ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>>><<<<<<<

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி, காஞ்சிரபும் அருள்மிகு காமாட்சியம்மன் கோவிலில், பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

>>>>>>><<<<<<<

தொடர் விடுமுறை முடிந்து, சென்னை திரும்பும் பயணிகள் நெரிசல் காரணமாக, நெல்லையிலிருந்து சென்னை வரும் அனைத்து ரயில்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது.

>>>>>>><<<<<<<

தென் மாவட்டங்களிலிருந்து ஒரே நேரத்தில் மக்கள் சென்னை திரும்புவதால், செங்கல்பட்டு அருகேயுள்ள சிங்கப்பெருமாள்கோவிலில் நேற்றிரவு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>>END<<<<<<<<